இலங்கை அரச மருந்தாக்கல் கூட்டுத்தாபனம்

வெற்றிடங்கள்

இலங்கை அரச மருந்தாக்கல் கூட்டுத்தாபனம் அரச வைத்தியசாலைகளுக்கு தேவையான மருந்து மற்றும் சத்திரசிகிச்சை பொருட்களை இறக்குமதி செய்யும் ஒரே அரச நிறுவனம் என்பதோடு, தனியார் துறைக்காக மருந்துகளை இறக்குமதி செய்து விநியோகிக்கும் முதன்மையான நிறுவனமுமாகும்.

எமது நிறுவனத்தால் கீழ் குறிப்பிடப்பட்ட வெற்றிடங்களை நிரப்புவதற்கு கீழுள்ளவாறு தகுதி பெற்ற இலங்கை பிரசைகளிடம் இருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

மருந்தாளர் – (MA 2.1) III ஆம் தரம்

(a) இலங்கை மருத்துவச் சபையினால் வழங்கப்பட்ட மருந்தாளர் ஒருவராக தேசிய தொழில் தகைமை 5 தரத்திற்கு குறையாத பதிவுச் சான்றிதழுடன், அரச/ கூட்டுத்தாபனம்/ சபை/ புகழ்பெற்ற வர்த்தக நிறுவனம் ஒன்றுக்கு உரிய பதிவு செய்யப்பட்ட ஒசுசல ஒன்றில் மருந்து சேர்க்கை பணிகளில் குறைந்தது ஓர் ஆண்டு தகைமைக்கு பின்னராக அனுபவத்தைப் பெற்றிருத்தல் வேண்டும்.

மற்றும்

(b) கணினி அறிவு

சம்பள அளவு: ரூபா 37,890/-, 375/- x 10 x 440 /- x 7, 620/- x 4, 825/- x 20 - 63,700/- (தோராயமாக மாத ஊதியம் ரூபா 115,914/- அளவாகும்)

(அதற்காக அடிப்படைச் சம்பளம், மருந்து பாதுகாப்புக் கொடுப்பனவு, செயல்திறன் கொடுப்பனவு, போக்குவரத்துக் கொடுப்பனவு மற்றும் விசேட கொடுப்பனவு அடங்கும்.)

வயது வரம்பு: 18 வயதுக்கு குறையாத மற்றும் 45 வயதுக்கு மேற்படாதவராகவும் இருத்தல் வேண்டும்.

விண்ணப்பதாரர்கள்,

i. இலங்கை பிரசையாக இருத்தல் வேண்டும்.

ii. பதவியின் கடமையை முறையாக மேற்கொள்வதற்கு தேவையான உடல் மற்றும் உளத் தகைமை இருத்தல் வேண்டும்.

iii. சிறந்த பண்புடையவராக இருத்தல் வேண்டும்.

தேர்வு செய்யப்பட்ட விண்ணப்பதாரர்களுக்கு மேலுள்ள மாதாந்தக் கொடுப்பனவுகள் தவிர கீழ் குறிப்பிடப்பட்ட கவர்ச்சிகரமான ஏனைய நன்மைகள் உரித்தாகும்.

- மாதாந்த வருகை கொடுப்பனவு
- பெறப்படாத விடுப்புகளை பணமாக்கல்
- வருடாந்த ஊக்கக் கொடுப்பனவு
- மருத்துவ நன்மைகள் மற்றும் ஊழியருக்கு மற்றும் குடும்பத்தினருக்கான மருத்துவமனையில் அனுமதிக்கப்படும் மருத்துவ காப்புறுதி
- பகல் உணவுக் கொடுப்பனவு

ஆட்சேர்ப்பு முறை -

1. விண்ணப்பதாரர்களால் தமது வயது, கல்வி தகைமைகள், பயிற்சி, சேவை அனுபவம், தற்போதைய பதவி, சம்பளப்படி மற்றும் சம்பள அளவு இதற்கு முன்னர் ஏற்ற பதவி, முந்தைய தொழில் வழங்குநரிடம் பணிக்கு இணைந்த மற்றும் சேவையில் இருந்து விலகிய திகதி அடங்கும் வகையில் தாமாக தயாரிக்கப்பட்ட விண்ணப்பத்தைச் சமர்ப்பித்தல் வேண்டும். அதேபோன்று தேசிய அடையாள அட்டை பிரதி, குறித்த சான்றிதழ்களின் பிரதிகள் மற்றும் உறவினர் அல்லாத இருவரின் பெயர் மற்றும் முகவரிகளை சமர்ப்பித்தல் வேண்டும். குறித்த சான்றிதழ்களின் பிரதிகள் இல்லாது சமர்ப்பிக்கும் விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்.
2. அரச/ கூட்டுத்தாபனம்/ சபை/ சட்டரீதியான நிறுவனங்களில் பணியாற்றும் விண்ணப்பதாரர்கள் தமது விண்ணப்பங்களை, குறித்த நிறுவன தலைவர்கள் ஊடாக அனுப்புதல் வேண்டும்.
3. பொதுவான நிபந்தனைகள்
   - விண்ணப்பதாரர்களால் பதிவு ஒன்றுக்காக விண்ணப்பிப்பதற்கு தகுதி பெற்ற ஒருவராக கருதப்படுவது, தேவையான அனைத்து தகைமைகளையும் 2026.11.23 ஆம் திகதி அல்லது அதற்கு முன்னர் பூர்த்தி செய்திருந்தால் மாத்திரமாகும்.
   - விண்ணப்பதாரர்கள் திருப்திகரமான சேவைக் காலம் ஒன்றை பெற்றிருத்தல் வேண்டும்.
   - விண்ணப்பத்தில் வழங்கப்பட்டிருக்கும் அனைத்து விபரங்களும் சரியானது மற்றும் முழுமையானது என்பதை விண்ணப்பதாரரால் உறுதி செய்தல் வேண்டும்.
   - மேல் குறிப்பிடப்பட்ட தேவைகளுக்கு அமையாத விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்.
   - அங்கீகரிக்கப்பட்ட ஆட்சேர்ப்பு நடைமுறைக்கு அமைய விண்ணப்பம் கோரப்பட்ட பின் எழுத்துப் பரீட்சை மற்றும் அரச மருந்தாக்கல் கூட்டுத்தாபனத்தினால் நியமிக்கப்படும் சபை ஒன்றினால் நடத்தப்படும் கட்டமைக்கப்பட்ட நேர்முகப்பரீட்சைக்கு தோற்றுதல் வேண்டும்.
   - இந்த அறிவித்தலில் உள்ளடங்காத ஏதேனும் விடயம் அல்லது ஆட்சேர்ப்பின் செயற்பாட்டின்போது எழுகின்ற எந்தவொரு சிக்கல் தொடர்பிலும் அரச மருந்தாக்கல் கூட்டுத்தாபன பணிப்பாளர் சபையினால் தீர்மானம் எடுக்கப்படும் என்பதோடு அந்த முடிவு இறுதி முடிவாக அமையும்.

விண்ணப்பங்களை ஏற்கும் இறுதித் திகதி: 2026 நவம்பர் 23

விண்ணப்பங்களை இடும் கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் விண்ணப்பிக்கும் பதவியை தெளிவாகக் குறிப்பிடுதல் வேண்டும், பதிவுத் தபாலில் 2026.11.23 ஆம் திகதிக்கு அல்லது அதற்கு முன்னர் கிடைக்குமாறு பதிவுத் தபாலில் மாத்திரம் அனுப்புதல் வேண்டும்.

விண்ணப்பங்களை அனுப்ப வேண்டிய முகவரி:

பிரதி பொது முகாமையாளர் (மனித வள மற்றும் நிர்வாகம்) பதில்,
இலங்கை அரச மருந்தாக்கல் கூட்டுத்தாபனம்,
"மெஹவர பியச", 16ஆவது மாடி, இல. 41,
கிருள வீதி, நாராஹென்பிட்ட, கொழும்பு -05,

தொலைபேசி இலக்கம் 0112 320 356 - 9